# தொழில் பங்குதாரர்களுக்கான அமல்படுத்துதல் விதிமுறைகள்[1]

## I. அறிமுகம்

இந்த ஆவணத்தின் நோக்கத்திற்காக, **"தொழில் பங்குதாரர்கள்"** என்பது, இறக்குமதியாளர்கள் அல்லது ஏஜென்டுகள் போன்ற வணிக நிறுவனங்களைக் குறிக்கிறது. இவர்களுடன் amfori BSCI பங்கேற்பாளர் ஒரு வணிகத் தொடர்பை வைத்துள்ளார், மற்றும் இவர்கள் மூலமாக amfori BSCI பங்கேற்பாளர்கள் amfori BSCI நடத்தை விதியின் கொள்கைகளை அடுக்கடுக்காக, கண்காணிக்கப்படும் உற்பத்தியாளர்களுக்குக் கொண்டு செல்கிறார்கள்.

இந்தச் சொல், ஒரு உற்பத்தியாளர் வணிகத் தொடர்பு வைத்துள்ள மற்றும் அந்த உற்பத்தியாளர், amfori BSCI நடத்தை விதியின் கொள்கைகளைக் கடைபிடிக்க வேண்டுமென்று உத்தேசிக்கும், துணை ஒப்பந்தக்காரர்கள் அல்லது துணை வழங்குநர்கள் ஆகியோரையும் குறிக்கும்.

இந்த அமல்படுத்துதல் விதிமுறைகளைக் கையொப்பமிடுவதன் மூலம், **தொழில் பங்குதாரர்கள், amfori BSCI நடத்தை விதி அல்லது அதற்கு இணையானதை** ஒப்புக்கொள்வதோடு, தங்கள் செல்வாக்கு வட்டத்திற்குள், அவற்றை அமல்படுத்துவதற்கான நியாயமான தகுந்த நடவடிக்கைகளை எடுப்பதற்கு பொறுப்பேற்கின்றனர்.

இந்த ஆவணம், amfori BSCI நடத்தை விதியில், அதற்கு இணையான மற்ற நடத்தை விதி ஏதாவது மற்றும் முறையான சம்பந்தப்பட்ட அமைப்பையும் சேர்வதைக் குறிக்கிறது.

**மூன்றாம் தரப்புப் பங்குதாரர்கள் என்பது,** இந்த ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளபடி, இந்த அமல்படுத்துதல் விதிமுறைகளில் கையொப்பமிடும் தொழில் பங்குதாரர்களைக் குறிக்கிறது.

இந்த அமல்படுத்துதல் விதிமுறைகளில் கையொப்பமிட்ட தொழில் பங்குதாரர்கள் **amfori BSCI கண்காணிப்பு நடைமுறையில் உட்படுத்தப்பட மாட்டார்கள்.** எனினும், amfori BSCI

[1] பதிப்புரிமை 2017 மூலம் amfori

பங்கேற்பாளரின் தகுந்த விழிப்புணர்வு நடைமுறையின் விளைவாக, இந்தத் தொழில் பங்குதாரர், **உற்பத்தியாளர்களுக்கான** அமல்படுத்துதல் விதிமுறைகளில் கையொப்பமிட வேண்டுமென்று விரும்பும் பட்சத்தில், amfori BSCI பங்கேற்பாளருக்கு இந்தத் தொழில் பங்குதாரரைக் கண்காணிப்பு நடைமுறையில் இணைக்கும் உரிமை இருக்கிறது.

## II. சமூகப் பொறுப்புணர்வுள்ள வணிகத்திற்கு அர்ப்பணிப்பு

2.1. amfori BSCI நடத்தை விதிகளில் உள்ள பொறுப்புக்களை நிறைவேற்றுவதில், **தொழில் பங்குதாரர்கள்,** amfori BSCI பங்கேற்பாளர்கள் மற்றும் அவர்களுடைய மூன்றாம் தரப்பு பங்குதாரர்களுடன் இணைந்துக் கூட்டாகச் செயல்படுகின்றனர், மற்றும் பங்குதாரர்களுடன் amfori BSCI நடத்தை விதி பயன்பாட்டை நோக்கி ஒரு ஆக்கபூர்வமான மற்றும் வெளிப்படையான உரையாடலைத் தொடர்கின்றனர்.

2.2. தொழில் பங்குதாரர்கள், தங்களுடைய amfori BSCI நடத்தை விதி ஒப்புதலைத் தங்கள் மூன்றாம் தரப்புப் பங்குதாரர்களுக்கு தங்கள் நிறுவன அமைப்பு வழியே செயலூக்கமாகத் தெரிவிக்கின்றனர்.

2.3. தொழில் பங்குதாரர்கள், தங்களது மூன்றாம் தரப்புப் பங்குதாரர்கள், **amfori BSCI நடத்தை விதியை முழுமையாகக் கடைபிடிப்பதற்காக செயல்புரியுமாறு கேட்கின்றனர்.**

2.4. தொழில் பங்குதாரர்கள், **தேவையான நடைமுறைகள் மற்றும் போதுமான ஆதாரங்களைக் கொண்டு,** amfori BSCI நடத்தை விதி தொடர்பான பொறுப்புக்களை எதிர்கொள்கின்றனர்.

2.5. தொழில் பங்குதாரர்கள், amfori BSCI நடத்தை விதியைத் தங்கள் **மூன்றாம் தரப்புப் பங்குதாரர்கள்** அவர்களின் செல்வாக்கு வட்டத்திற்குள் முழுமையாகக் கடைப்பிடிப்பதற்காக, அவர்களின் மூன்றாம் தரப்புப் பங்குதாரர்களுக்குப் பொருந்தும் amfori BSCI நடத்தை விதிக்குத் தேவையான, நியாயமான நடைமுறைகளை எடுக்க வேண்டும்.

2.6. தொழில் பங்குதாரர்கள், **amfori BSCI நடத்தை விதியின் மதிப்புகள் மற்றும் கொள்கைகளைப் புறக்கணிப்பது மற்றும்/அல்லது அமல்படுத்துதல் விதிமுறைகளை மீறுவது ஆகியவை,** amfori BSCI பங்கேற்பாளர்கள் கையொப்பமிட்ட தொழில் பங்குதாரர்களுடன் தங்களுடைய வணிகத் தொடர்புகளை நிறுத்திக்கொள்ளப் போதுமானவை என்பதை ஒப்புக்கொள்கின்றனர். இந்த விஷயத்தில், நிரூபிக்கும்

© பதிப்புரிமை amfori 2017

பொறுப்பு, amfori BSCI பங்கேற்பாளர்கள் அல்லது மூன்றாம் தரப்பு பங்குதாரர்களிடம் உள்ளது.

## III. வணிக நிறுவனக் கலாச்சாரத்திற்குள் சமூகப் பொறுப்புணர்வினை உட்பொதித்தல்

3.1. தொழில் பங்குதாரர்கள், தங்களுடைய கொள்முதல் பழக்கம் (எ.கா. விலை மற்றும்/அல்லது விநியோக நேரம் போன்ற) மூலம், தங்கள் மூன்றாம் தரப்புப் பங்குதாரர்கள் amfori BSCI நடத்தை விதியைக் கடைப்பிடிப்பதிலிருந்து விலகும் நிலைக்கு, அவர்களைக் கொண்டுவரக் கூடாது.

3.2. கொள்முதல் மற்றும் பிற சம்பந்தப்பட்டத் துறைகள் (அல்லது தனிநபர்கள்), பங்குதாரர்களின் நிறுவனக் கலாச்சாரங்களில் உள்ள பொறுப்பான வணிகத்தின் கொள்கைகளை ஒருங்கிணைப்பதில் பங்களிக்கும் வகையில் அவர்களுக்குப் **பயிற்சியும் ஊக்கமும்** அளிக்கப்பட வேண்டும்.

## IV. வழங்கல் சங்கிலியில் ஒத்துழைப்பு மற்றும் அதிகாரமளித்தல்

4.1. தொழில் பங்குதாரர்கள், **தங்கள் சொந்த ஊழியர்களுக்கு** amfori BSCI நடத்தை விதியில் அமைக்கப்பட்டுள்ள கொள்கைகளை நிலைநிறுத்துவற்கும், நிறைவேற்றுவதற்கும் தேவையானத் திறன்களை வளர்ப்பதற்கான **பயிற்சியளித்து ஆதரிக்கின்றனர்.**

4.2. தொழில் பங்குதாரர்கள், **தங்களுடைய மூன்றாம் தரப்புப் பங்குதாரர்கள் amfori BSCI நடத்தை விதியைக் கடைபிடிப்பது மீதான திறன் பற்றியும், இந்த எதிர்பார்ப்புகளை எதிர்கொள்வதில் உதவியாக அவர்களுக்குத் துணை நிற்கவும், அவர்களுடன் ஒரு ஆக்கபூர்வமான மற்றும் வெளிப்படையான உரையாடலை நாடுகின்றனர்.**

4.3. தொழில் பங்குதாரர்கள், **நிர்வாகம், தொழிலாளர்கள், மற்றும்/அல்லது அவர்களதுப் பிரதிநிதிகளுக்கு இடையே, amfori BSCI நடத்தை விதியை வெற்றிகரமாக அமல்படுத்த**

© பதிப்புரிமை amfori 2017

**வழிவகுக்கும் அமைப்புகள் மற்றும் நடைமுறைகளின் மேம்பாடு மற்றும் அமல்படுத்துதலில் செயலூக்கமான ஒத்துழைப்பை ஊக்குவிக்கின்றனர்.**

## V. வழங்கல் சங்கிலியில் தகுந்த விழிப்புணர்வு

5.1. தொழில் பங்குதாரர்கள், பின்வருவனவற்றில் **தகுந்த விழிப்புணர்வுடன் செயல்படப்** பொறுப்பேற்கின்றனர்: (a) amfori BSCI நடத்தை விதிக்கு எதிரான உண்மையான மற்றும் சாத்தியமான எதிர்மறைத் தாக்கங்களைக் கணக்கீடு செய்தல்; (b) இந்த எதிர்மறைத் தாக்கங்களை ஏற்படுத்தும் மிக முக்கியமான இடர்கள் வழங்கல் சங்கிலியில் எந்த இடத்தில் நிகழ்கின்றன என்பதைக் கண்டறிதல் மற்றும் (c) அவற்றைத் தடுக்கும் மற்றும்/அல்லது amfori BSCI நடத்தை விதியுடன் அவர்கள் இணங்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டு செயல்படுதல்.

5.2. தொழில் பங்குதாரர்கள், தங்கள் தொழில் பங்குதாரர்களின் பொறுப்பான நடத்தையைப் பற்றி நம்பகமானத் தகவலைச் சேகரித்து மதிப்பிடுகின்றனர், மற்றும் அவர்கள் **தகுந்த விழிப்புணர்வுடன் செயல்பட்டதற்குத் தேவையான ஆவண** ஆதாரங்களை வைத்திருக்கிறார்கள்.

5.3. தொழில் பங்குதாரர்கள், **தங்கள் மூன்றாம் தரப்பு பங்குதாரர்கள்** amfori BSCI நடத்தை விதியை அமல்படுத்துவதில் மற்றும்/அல்லது நிலைநிறுத்துதலில் தங்களது முன்னேற்றம், மற்றும் தாங்கள் ஈடுபட்டுள்ள amfori BSCI நடத்தை விதியின் மதிப்புகள் மற்றும் கொள்கைகளுக்கெதிரான எதிர்மறைத் தாக்கத்திற்கான தங்களின் பதில்களுக்குக் கிடைக்கும் பலன்கள் பற்றி **முறையாக அவர்களுக்கு அறிக்கை அளிக்க** வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறார்கள்.

5.4. தொழில் பங்குதாரர்கள், வழங்கல் சங்கிலியினால் எதிர்மறைத் தாக்கமடைந்த தனி நபர்கள் மற்றும் சமூகங்களுக்குப் பதில் அளிக்க, தங்களால் இயன்ற அளவு அதிகமாக, ஒரு திறம்பட்ட **இயங்கும் குறைதீர்ப்பு வழிமுறையை** கட்டமைக்கவேண்டும் அல்லது ஈடுபடவேண்டும்- கூடுமான அளவுக்கு.

© பதிப்புரிமை amfori 2017

## VI. தகவல் மேலாண்மை

**6.1.** தொழில் பங்குதாரர்கள், **amfori BSCI பங்கேற்பாளர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, தங்களது அமல்படுத்துதல் திட்டம் மற்றும் தங்களுடைய மூன்றாம் தரப்புப் பங்குதாரர்களின் தொடர்ச்சியான முன்னேற்றம்**, amfori BSCI நடத்தை விதியின் மதிப்புகள் மற்றும் கொள்கைகளுக்கு எதிரான தாக்கத்திற்கான பயனுள்ள பதில்கள் ஆகியவற்றை அவர்களுக்குத் துல்லியமாக அறிவிக்க வேண்டும்.

**6.2.** **தொழில் பங்குதாரர்கள், சாத்தியமான பாதிப்படைந்த பங்குதாரர்களின் கவலைகளைப் புரிந்து கொண்டு** அவற்றிற்கான அறிவுரையும் ஆலோசனையும் பெற அவர்கள் வெளியே நம்பிக்கையான, தனித்துச் செயல்படும் வல்லுநர்களை நாடுகிறார்கள். அவர்களின் அமல்படுத்துதல் நடைமுறையினைச் சரிபார்க்க, அரசாங்கங்கள், சிவில் சமூகம் மற்றும் தொழிலாளர்கள் பிரதிநிதிகள் இதில் அடங்குவார்கள்.

**6.3.** தொழில் பங்குதாரர்கள், தங்களுடைய மூன்றாம் தரப்புப் பங்குதாரர்களின், amfori BSCI நடத்தை விதியின் மதிப்புகள் மற்றும் கொள்கைகள் மீது எதிர்மறையானத் தாக்கங்களை உண்டாக்கக்கூடிய, எந்தவொரு தவறான நடத்தையையும், தங்களுக்கு அது தெரியவந்த **உடனே தங்களது amfori BSCI பங்கேற்பாளருக்குத் தெரிவிக்கப் பொறுப்பேற்கின்றனர்.**

________________________

*நிறுவனத்தின் சார்பாக கையொப்பம்*

________________________

*கையொப்பத்தின் தேதி*

________________________

*நிறுவனத்தின் பெயர்*

________________________

*நபரின் பெயர்*

© பதிப்புரிமை amfori 2017